www.Padasalai.Net www.CBSEtips.in

Tvl12Acc

காலாண்டுப் பொதுத் தேர்வுகள் - செப்டம்பர் 2022

வகுப்பு - 12

கால அளவு:3.00 மணி நேரம் **கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்:90

பகுதி - I

குறிப்பு: **1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **20×1=20**

2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
3. உரிமையாளரின்சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில் அவருடைய முதல் தொகை.
   அ) ₹ 85,000 ஆ) ₹ 1,06,000 இ) ₹ 21,000 ஈ) ₹ 64,000
4. வருவாய்மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக்கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரிதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
5. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
6. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி
7. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
   அ) வழங்குப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்
8. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது
   ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்
9. சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
   அ) ₹ 25,000 ஆ) ₹ 5,000 இ) ₹ 10,000 ஈ) ₹ 15,000
10. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
    அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
    இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது
11. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
    அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாராக் க/கு
12. பொருத்துக.

(i)	தியாக விகிதம்	1.	முதலீட்டு மாறுபடும் நிதி
(ii)	பழைய இலாபப்பகிர்வு விகிதம்	2.	பகிர்ந்துதரா இலாபம்
(iii)	மறுமதிப்பீட்டு கணக்கு	3.	நற்பெயர்
(iv)	முதல் கணக்கு	4.	பதிவுறா பொறுப்பு

	(i)	(ii)	(iii)	(iv)
அ)	1	2	3	4
ஆ)	3	2	4	1
இ)	4	3	2	1
ஈ)	3	1	2	4

13. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது
    அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை
14. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
    அ) அனைத்துகூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள்
    இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்
15. கூட்டாளி ஒருவர் ஜீன் 30 அன்றுகூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
    அ) நடப்புகணக்காண்டின் இறுதி வரைக்கும்
    ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
    இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
    ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்
16. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
    அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
    இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

17. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
 அ) சராசரிஇலாபம் ஆ) சாதாரண இலாப விகிதம்
 இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் ஈ) இவைகளில் ஏதுமில்லை
18. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
 அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்
19. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
 அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
 இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு
20. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாபநட்டங்களை 5:3 என்றவிகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தை கணக்கிடவும்.
 அ) 1:3 ஆ) 3:1 இ) 5:3 ஈ) 3:5

பகுதி - II

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30க்கு கட்டாயம் விடையளி. **7×2=14**

21. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.
22. பின்வரும் தகவல்களிலிருந்து இலாப அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	2,20,000
2018, டிசம்பர் 31 அன்று முதல்	1,80,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	40,000
அவ்வாண்டில் எடுப்புகள்	50,000

23. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?
24. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
25. மணி என்ற கூட்டாளி 2018 செப்டம்பர் 1 அன்று ரூ. 30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு மாறுபடும் முதல் முறையில் அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
26. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு.
 2014 = ₹ 4,000 ; 2015 = ₹ 3,000 ; 2016 = ₹ 5,000 ; 2017 = ₹ 4,500 ; 2018 = ₹ 3,500
 5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
27. தியாக விகிதம் என்றால் என்ன?
28. மாலா மற்றும் அனிதா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். மெர்சி என்பவர் 1/5 இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் கூட்டாளியாக சேருகிறார். புதிய இலாபப்பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.
29. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
30. கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளி தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2 ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

பகுதி - III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40க்கு கட்டாயம் விடையளி. **7×3=21**

31. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.
32. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.

விவரம்	₹
தொடக்க கடனீந்தோர்	1,70,000
கொள்முதல் திருப்பம்	20,000
கடனீந்தோருக்குச் செலுத்தியது	4,50,000
இறுதிக் கடனீந்தோர்	1,90,000

33. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

விவரம்	1.1.2018 (₹)	31.12.2018 (₹)
பெறவேண்டிய சந்தா	10,000	7,000
முன்கூட்டிப்பெற்ற சந்தா	3,000	5,000

 2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹ 1,50,000
34. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 ன் படிகடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும்.
35. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.
 அ) சராசரி இலாபம் ₹ 20,000
 ஆ) சாதாரண இலாப விகிதம் 10%
 இ) பயன் படுத்தப்பட்ட முதல் ₹ 1,50,000
36. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?
37. இராஜா மற்றும் இரவி என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இராம் என்பவரை 1/4 இலாபப்பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். இராம் 1/20 பங்கினை இராஜாவிடமும், 4/20 பங்கினை இரவியிடமும் பெறுகிறார். புதிய இலாபம் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

38. ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(i) வளாகத்தின் மதிப்பை ₹ 40,000 உயர்த்த வேண்டும்.
(ii) சரக்கிருப்பு ₹ 3000, இயன்திரம் ₹ 6,500 மதிப்பு குறைக்க வேண்டும்.
(iii) கொடுபடாச் செலவுகள் ₹ 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
மறுமதிப்பீட்டுக்கணக்கு மட்டும் தயாரிக்கவும்.

39. ஆதாய விதைம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?

40. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.
2016 = ₹ 8,000 ; 2017 = ₹ 10,000 ; 2018 = ₹ 9,000

பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **7×5=35**

41. அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) சராசரி இலாபம் ₹ 14,000
(ii) சாதாரண இலாபம் ₹ 4,000
(iii) சாதாரண இலாப விகிதம் 15%
(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5
5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352. **(அல்லது)**

ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?

42. அ) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் யாவை? **(அல்லது)**

ஆ) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலை குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்			கட்டடம்	80,000
மணி	50,000		சரக்கிருப்பு	20,000
ரமா	50,000		அறைகலன்	20,000
தேவன்	50,000	1,50,000	கடனாளிகள்	20,000
பற்பல கடனீந்தோர்		20,000	கைரொக்கம்	10,000
இலாபநட்டக் க/கு		30,000		
		2,00,000		2,00,000

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.
(i) சரக்கிருப்பில் ₹ 5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்.
(ii) வாரா ஐயக்கடனுக்கு ₹ 1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
(iii) கட்டடத்தின் மதிப்பு ₹ 16,000 அதிகரிக்கப்பட வேண்டும்.
(iv) மணிக்குச் சேர வேண்டிய பணம் உடனடியாகச் செலுத்த வில்லை.
மறுதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் க/கு தயாரிக்கவும்.

43. அ) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

விவரம்	₹
மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு	3,000
அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள்	17,000
பழையமட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை	2,000
மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு	4,000

(அல்லது)

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து ரூபன் மற்றும் டெரி அவர்களின் முதல், நிலைமுதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	ரூபன் (₹)	டெரி (₹)
2018, ஏப்ரல் 1 அன்று முதல்	70,000	50,000
2018, ஏப்ரல் 1 அன்று நடப்புக்கணக்கு (வ)	25,000	15,000
கூடுதல் முதல் கொண்டுவந்தது	18,000	16,000
2018-2019 ல் எடுப்புகள்	10,000	6,000
எடுப்புகள் மீது வட்டி	500	300
இலாபப்பங்கு (2018-2019)	35,000	25,800
முதல் மீது வட்டி	3,500	2,500
சம்பளம்	-	18,000
கழிவு	12,000	-

44. அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு.
(i) ஈட்டிய இலாபங்கள் 2016 = ₹ 25,000 ; 2017 = ₹ 23,000 ; 2018 = ₹ 26,000.
(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யபடவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டதால் அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். **(அல்லது)**

ஆ) மாலதி மற்றும் ஷோபனா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 5:4 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் ஜெய ஸ்ரீ என்பவரை 1/3 இலாபப்பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். ஜெய ஸ்ரீ தன்னுடைய பங்காக ₹ 6,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2:1 நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக் கொண்டு, நற்பெயர் சரிக்கட்டுதலுக்கான தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

45. அ) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல்முறையே ₹ 60,000 மற்றும் ₹ 40,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 2:1, அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ₹ 5,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

(i) முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது.

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி, முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப்படும் போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும் போது

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்ற பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டு வருவாய் மற்றும் செலவினக் கணக்குத் தயார் செய்யவும்.

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்கஇருப்பு			
கைரொக்கம்	14,000	சம்பளம்	20,000
வட்டி பெற்றது	5,000	வாடகை	24,000
சந்தா	55,000	பயணச் செலவுகள்	2,000
உயில் கொடை	48,000	அச்சு மற்றும் எழுதுபொருள்	6,000
நுழைவுக்கட்டணம்	7,000	முதலீடுகள் செய்தது	50,000
அறைகலன் விற்றது	16,000	விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது	33,000
(ஏட்டுமதிப்பு ₹ 17,000)		இருப்பு கீ/இ	
		கைரொக்கம்	10,000
	1,45,000		1,45,000

46. அ) பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள்	1,30,000
அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது	4,20,000
விற்பனை திருப்பம்	35,000
வாராக்கடன்	15,000
2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள்	2,00,000
ரொக்க விற்பனை	4,60,000

(அல்லது)

ஆ) ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

(i) கட்டடத்தின் மதிப்பில் ₹ 30,000 அதிகரிக்க வேண்டும்.

(ii) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iii) கொடுபடா பொறுப்புகளுக்கு ₹ 1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்போட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

47. அ) கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

விவரம்	₹
அறைகலன்	50,000
கட்டடம்	40,000
2017-2018 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	10,000
2018-2019 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது	5,000
கடன் வாங்கியது	10,000
முதலீடுகள்	20,000
கைரொக்கம்	4,000
வங்கிரொக்கம்	6,000

(அல்லது)

ஆ) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Quarterly Examination – September 2022

Class XII - Accountancy

Tirunelveli District

Prepared By

Mrs. J Josephine Malliga M.Com., M.A., M.Ed.,

Accountancy Teacher,

Tirunelveli.

Part – I

1. இ. சிறிய அளவிலான தனிஆள் வணிகம்

2. இ. முதல்

3. ஈ. ₹ 64,000

4. அ. பெயரளவு கணக்கு

5. அ. ஒரு சொத்து

6. இ. கடன் மீது வட்டி

7. அ. வழங்கப் படுவது இல்லை

8. ஆ. கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்

9. இ. ₹ 10,000

10. அ. நற்பெயர் ஒரு புலனாகா சொத்து

11. ஆ. பெயரளவு கணக்கு

12. ஆ. 3 2 4 1

13. அ. ஆதாயம்

14. ஈ. தியாகம் செய்த கூட்டாளிகள்

15. இ. கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்

16. இ. விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு

17. ஆ. சாதாரண இலாப விகிதம்

18. ஈ. 6.5 மாதங்கள்

19. ஆ. முதலின வரவு

20. இ. 5:3

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

Part – II

21. ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

22.

2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
இறுதி முதல்	1,80,000
கூட்டுக:– எடுப்புகள்	50,000
	2,30,000
கழிக்க:– கூடுதல் முதல்	40,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	1,90,000
கழிக்க:– தொடக்க முதல்	2,20,000
நட்டம்	**(–) 30,000**

∴ **நட்டம் = ₹ 30,000**

23. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்ப டும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

இது ஒரு சொத்துக் கணக்கின் தன்மையைக் கொண்டதாகும்.

24. கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கிடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும். இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 – ன் படி ஒரு கூட்டாண்மை நிறுவனம், கூட்டாண்மை ஒப்பாவணத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், கூட்டாளிகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு ஆதாரமாக இது செயல்படுவதால் கூட்டாண்மை ஒப்பாவணத்தை கொண்டிருப்பது விரும்பத்தக்கதாகும்.

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

25.

நாள்	விவரம்	பே.ப.எண்	பற்று ₹	வரவு ₹
2018, மார்ச் 31	மணி முதல் க/கு பற்று எடுப்பு மீது வட்டி க/கு (எடுப்பு மீது வட்டி வழங்கியது)		600	600

நாள்	விவரம்	பே.ப.எண்	பற்று ₹	வரவு ₹
2018, மார்ச் 31	எடுப்பு மீது வட்டி க/கு பற்று இலாப நட்ட பகிர்வு க/கு (எடுப்பு மீது வட்டி கணக்கு முடிக்கப்பட்டது)		600	600

எடுப்பு மீது வட்டி கணக்கிடல் –

எடுப்பு மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

மணி = 30,000 x 6 /100 x 4/12 = ₹ 600

26.

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{4{,}000 + 3{,}000 + 5{,}000 + 4{,}500 + 3{,}500}{5}$$

$$= \frac{20{,}000}{5} = ₹\ 4{,}000$$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$= 4{,}000 \times 3 = ₹\ 12{,}000$$

27. பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கு அவர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினைதியாகம்செய்யலாம். இந்த தியாகத்தை அனைத்துக் கூட்டாளிகள் அல்லது சில கூட்டாளிகள் செய்யலாம். தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை புதிய கூட்டாளிக்கு ஆதரவாக தியாகம் செய்வது அல்லது விட்டுக் கொடுப்பது ஆகும்.

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

தியாக விகிதம் = பழைய கூட்டாளிகள் தியாகம் செய்த பங்கின் விகிதம்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

புதிய கூட்டாளியின் பங்கு என்பது பழைய கூட்டாளிகளால் தியாகம் செய்யப்பட்ட பங்குகளின் கூட்டுத்தொகை ஆகும்.

28.

தீர்வு – (தியாகப் பங்கு மற்றும் தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்படாத போது)

மாலா மற்றும் அனிதாவின் தியாக விகிதம் = 3 : 2

மொத்த பங்கு = 1 எனக் கொள்க

மீதமுள்ள பகுதி = 1 – புதிய கூட்டாளியின் பங்கு

$= 1 - \frac{1}{5}$

$= \frac{4}{5}$

புதிய இலாப விகிதம் = பழைய பங்கு X மீதமுள்ள பங்கு

		மாலா	அனிதா	மெர்சி
பழைய பங்கு	=	$\frac{3}{5}$	$\frac{2}{5}$	---
புதிய பங்கு	=	$\frac{3}{5} X \frac{4}{5}$	$\frac{2}{5} X \frac{4}{5}$	---
	=	$\frac{12}{25}$	$\frac{8}{25}$	$\frac{5}{25}$ (20–25)

புதிய இலாப விகிதம் = 12 : 8 : 5

தியாகவிகிதம் = பழைய பங்கு – புதிய பங்கு

புதிய பங்கு	=	$\frac{12}{25}$	$\frac{8}{25}$	$\frac{5}{25}$
	=	$\frac{3}{5} - \frac{12}{25}$	$\frac{2}{5} - \frac{8}{25}$	---
	=	$\frac{15 - 12}{25 - 25}$	$\frac{10 - 8}{25-25}$	---
	=	$\frac{3}{25}$	$\frac{2}{25}$	

தியாக விகிதம் = 3 : 2

29. ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால், அது கூட்டாளி விலகல் எனப்படும். கூட்டாளியின் உடல்நிலை

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

பாதிப்பு, முதுமை, வேறு இடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைத்தல், இதர கூட்டாளிகளுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் முதலியன ஒரு கூட்டாளி கூட்டாண்மையிலிருந்து விலகுவதற்கு காரணங்களாகும்.

30.

ஆதாயப் பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

மாலா $= \frac{3}{5} - \frac{2}{5} = \frac{1}{5}$

நீலா $= \frac{2}{5} - \frac{1}{5} = \frac{1}{5}$

ஆகையால், மாலா மற்றும் நீலா ஆகியோரின் ஆதாய விகிதம் = 1 : 1

Part – III

31.

வேறுபாட்டிற்கான அடிப்படை	நிலை அறிக்கை	இருப்புநிலைக் குறிப்பு
1. நோக்கம்	நிலை அறிக்கை பொதுவாக வியாபாரத்தின் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது.	இருப்புநிலைக் குறிப்பு வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
2. கணக்கியல் முறை	இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது நிலைஅறிக்கை தயாரிக்கப்படுகிறது.	கணக்குகள் இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்கப்படும் போது இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கப்படுகிறது.
3. தயாரிப்பின் அடிப்படை	இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல.	இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது.

32.

ப மொத்தக் கடனீந்தோர் கணக்கு வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம் செலுத்தியது	4,50,000	இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு)	1,70,000
கொள்முதல் திருப்பம்	20,000	**கடன் கொள்முதல் க/கு (இருப்பு)**	**4,90,000**
இருப்பு கீ/இ (இறுதி இருப்பு)	1,90,000		
	6,60,000		**6,60,000**

∴ கடன் கொள்முதல் = ₹ 4,90,000

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

33.

2018 ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்

விவரம்	₹	₹
2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா		1,50,000
கூட்டுக: 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017–ல் பெற்றது	3,000	
2018 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	7,000	10,000
		1,60,000
கழிக்க: 2017–ல் பெற வேண்டிய சந்தா	10,000	
2018–ல் முன்கூட்டிப் பெற்ற சந்தா	5,000	15,000
2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம்		1,45,000

34.

3.4 கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளின் பயன்பாடு

கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது அல்லது கூட்டாண்மை ஒப்பாவணத்தில் வெளிப்படையான அறிக்கை எதுவும் இல்லாத நிலையில், சட்டத்தின் பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன:

(i) **கூட்டாளிகளின் ஊதியம்** [பிரிவு 13(அ)]
எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பு ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

(ii) **இலாபப் பகிர்வு விகிதம்** [பிரிவு 13(ஆ)]
இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

(iii) **முதல் மீது வட்டி** [பிரிவு 13(இ)]
கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, தான் அளித்த முதல் தொகைக்கு முதல் மீது வட்டி பெற உரிமை உடையவராயின், அந்த முதல் மீது வட்டி இலாபத்திலிருந்து மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

(iv) **கூட்டாளிகளிடமிருந்து நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் மீதான வட்டி** [பிரிவு 13(ஈ)]
கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்.

(v) **எடுப்புகள் மீது வட்டி**
கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக்கூடாது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

35.

$$\text{மொத்த மூலதன மதிப்பு} = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

$$= \frac{20,000}{10} \times 100$$

= ₹ 2,00,000

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

= 2,00,000 – 1,50,000

= ₹ 50,000.

36. ஒரு புதிய கூட்டாளியை சேர்க்கும் போது பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்ய வேண்டும்:

1. பகிர்ந்து தரா இலாபம், காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்தளித்தல்
2. சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
3. புதிய இலாபவிகிதம் மற்றும் தியாகவிகிதத்தை நிர்ணயித்தல்
4. நற்பெயர் சரிக்கட்டுதல்
5. முதல் கணக்கை புதிய இலாபவிகிதத்தின் அடிப்படையில் சரிக்கட்டுதல் (ஒப்புக் கொண்டால்)

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

37.

புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப்பங்கு

		இராஜா	இரவி	இராம்
பழைய பங்கு	=	$\frac{3}{5}$	$\frac{2}{5}$	---
தியாகப் பங்கு	=	$\frac{1}{20}$	$\frac{4}{20}$	---
புதியப் பங்கு	=	$\frac{3}{5} - \frac{1}{20}$	$\frac{2}{5} - \frac{4}{20}$	---
	=	$\frac{60-5}{100}$	$\frac{40-20}{100}$	---
	=	$\frac{55}{100}$	$\frac{20}{100}$	$\frac{25}{100}$

புதிய விகிதம் = 55 : 20 : 25

= 11 : 4 : 5

தியாக விகிதம் = 1 : 4

J Josephine Malliga M.Com., M.A., M.Ed., - Tirunelveli

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

38.

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018 ஏப்ரல் 1	வளாகம் க/கு ப மறுமதிப்பீட்டு க/கு (வளாகம் மதிப்பு உயர்த்தப்பட்டது)		40,000	40,000
,,	மறுமதிப்பீட்டு க/கு ப சரக்கிருப்பு க/கு இயந்திரம் க/கு கொடுபடாச் செலவுகள் க/கு (சொத்துகளின் மதிப்பு குறைப்பு மற்றும் கொடுபடா பொறுப்பு பதிவு செய்யப்பட்டது)		10,000	 3,000 6,500 500
,,	மறுமதிப்பீட்டு க/கு ப ரம்யா முதல் க/கு சாரா முதல் க/கு தாரா முதல் க/கு (மறுமதிப்பீட்டு இலாபம் பகிர்ந்தளிக்கப்பட்டது)		30,000	 15,000 9,000 6,000

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		3,000	வளாகம் க/கு	40,000
இயந்திரம் க/கு		6,500		
கொடுபடாச் செலவுகள் க/கு		500		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
ரம்யா முதல் க/கு (5/10)	15,000			
சாரா முதல் க/கு (3/10)	9,000			
தாரா முதல் க/கு (2/10)	6,000	**30,000**		
		40,000		40,000

39. ஆதாய விகிதம் கணக்கிடுவதின் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும். ஆதாயப்பங்கு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

ஆதாயப் பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

ஆதாய விகிதம் = தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப்பெற்ற ஆதாயத்தின் விகிதமாகும்

www.Padasalai.Net

40.

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

= $\frac{8,000 + 10,000 + 9,000}{3}$

= $\frac{27,000}{3}$

= ₹ 9,000

Part – IV

41. a

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 14,000 – 4,000

= ₹ 10,000

நற்பெயர் = உயர்இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

= 10,000 × 3,352

= **₹ 33,520.**

J Josephine Malliga M.Com., M.A., M.Ed., - Tirunelveli

www.Padasalai.Net

41. b

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

நாள்	விவரம்		பே.ப.எ.	பற்று ₹	வரவு ₹
	1. **சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது**				
	குறிப்பிட்ட சொத்து க/கு	ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு				xxx
	2. **சொத்துகளின் மதிப்பு குறையும் போது**				
	மறுமதிப்பீட்டு க/கு	ப		xxx	
	குறிப்பிட்ட சொத்து க/கு				xxx
	3. **பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது**				
	மறுமதிப்பீட்டு க/கு	ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு				xxx
	4. **பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது**				
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு	ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு				xxx
	5. **ஏட்டில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது**				
	குறிப்பிட்ட சொத்து க/கு	ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு				xxx
	6. **ஏட்டில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது**				
	மறுமதிப்பீட்டு க/கு	ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு				xxx
	7. **மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற**				
	(அ) மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால்				
	மறுமதிப்பீட்டு க/கு	ப		xxx	
	பழைய கூட்டாளிகளின் முதல் க/கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)				xxx
	(ஆ) மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால்				
	பழைய கூட்டாளிகளின் முதல் க/கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)	ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு				xxx

J Josephine Malliga M.Com., M.A., M.Ed., - Tirunelveli

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

42. a

அடிப்படை	தியாக விகிதம்	ஆதாய விகிதம்
1. பொருள்	இது புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள், தியாகம் செய்து கொடுக்கும் இலாபப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும்.	இது தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியிடமிருந்து பெறும் ஆதாயப் பங்கின் விகிதாரச்சாரம் ஆகும்.
2. நோக்கம்	இது தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது.	இது ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது.
3. கணக்கிடும் காலம்	இது புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது.	இது கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது.
4. கணக்கிடும் முறை	இது பழைய இலாப விகிதத்திற்கும் மற்றும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம்	இது புதிய இலாப விகிதத்திற்கும் மற்றும் பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம்.

42. b

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		5,000	கட்டடக் க/கு	16,000
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு		1,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
மணி முதல் க/கு (4/10)	4,000			
ரமா முதல் க/கு (3/10)	3,000			
தேவன் முதல் க/கு (3/10)	3,000	**10,000**		
		16,000		16,000

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ப முதல் கணக்கு வ

விவரம்	மணி ₹	ரமா ₹	தேவன் ₹	விவரம்	மணி ₹	ரமா ₹	தேவன் ₹
மணி கடன் க/கு	66,000			இருப்பு கீ/கொ	50,000	50,000	50,000
இருப்பு கீ/இ	–	62,000	62,000	மறுமதிப்பீட்டுக் க/கு	4,000	3,000	3,000
				இலாபநட்ட க/கு	12,000	9,000	9,000
	66,000	62,000	62,000		66,000	62,000	62,000
				இருப்பு கீ/கொ	–	62,000	62,000

43. a

வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின்
------ நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
வருவாய் செலவினக் கணக்கு

செலவுகள்	தொகை ₹	தொகை ₹	வருமானம்	தொகை ₹	தொகை ₹
பந்து மட்டைகள் தொடக்க இருப்பு	3,000		பழைய பந்து மட்டைகள் விற்றது		2,000
கூட்டுக ; நடப்பாண்டில் வாங்கியது	17,000				
	20,000				
கழிக்க ; பந்து மட்டைகள் இறுதி இருப்பு	4,000	16,000			

வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின்
------ நாளுக்குரிய இருப்புநிலைக்குறிப்பு

பொறுப்புகள்	தொகை ₹	தொகை ₹	சொத்துக்கள்	தொகை ₹	தொகை ₹
			பந்து மட்டைகள் இறுதி இருப்பு		4,000

43. b

ப ரூபன் டெரி என்னும் கூட்டாளிகளின் நிலை முதல் க/கு வ

நாள்	விவரம்	ரூபன் ₹	டெரி ₹	நாள்	விவரம்	ரூபன் ₹	டெரி ₹
31.03.19	இருப்பு கீ/இ	88,000	66,000	1.04.18	இருப்பு கீ / கொ	70,000	50,000
					வங்கி (கூடுதல் முதல்)	18,000	16,000
		88,000	66,000			88,000	66,000
				01.04.19	இருப்பு கீ / கொ	88,000	66,000

J Josephine Malliga M.Com., M.A., M.Ed., - Tirunelveli

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ப ரூபன் டெரி என்னும் கூட்டாளிகளின் நடப்பு க/கு வ

நாள்	விவரம்	ரூபன் ₹	டெரி ₹	நாள்	விவரம்	ரூபன் ₹	டெரி ₹
	எடுப்புகள் க/கு	10,000	6,000	1.04.18	இருப்பு கீ/கொ	25,000	15,000
	எடுப்பு மீது வட்டி க/கு	500	300		இலாபம் க/கு	35,000	25,800
31.03.19	இருப்பு கீ/ இ	65,000	55,000		முதல் மீது வட்டி க/கு	3,500	2,500
					சம்பளம் க/கு		18,000
					கழிவு க/கு	12,000	
		75,500	61,300			75500	61,300
				1.04.19	இருப்பு கீ/கொ	65,000	55,000

44. a

சரிகட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்

விவரம்	2016 ₹	2017 ₹	2018 ₹
இலாபம்	25,000	23,000	26,000
கழிக்க : திரும்பத் திரும்ப நிகழா வருமானம்	2,500	---	---
	22,500	23,000	26,000
கூட்டுக : தீயினால் சேதமடைந்த சரக்கிருப்பு	---	3,500	---
சரிகட்டப்பட்ட பின் இலாபம்	22,500	26,500	26,000

சராசரி இலாபம் $= \dfrac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \dfrac{22,500 + 26,500 + 26,000}{3}$

$= \dfrac{75,000}{3}$

= ₹ 25,000

J Josephine Malliga M.Com., M.A., M.Ed., - Tirunelveli

www.Padasalai.Net

எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீடு முனைமத்தினை சரிகட்டுவதற்கு முன் சராசரி இலாபம்	=	25,000
கழிக்க – எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீட்டு முனைமம்	=	250
சராசரி இலாபம்	**=**	24,750

நற்பெயர் = **சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை**

= 24,750 × 2

= ₹ 49,500.

44. b

தியாகவிகிதம் = **பழைய பங்கு – புதிய பங்கு**

		மாலதி	சோபனா
பழையபங்கு	=	$\frac{5}{9}$	$\frac{4}{9}$
புதிய பங்கு	=	$\frac{3}{6}$	$\frac{2}{6}$
தியாகப்பங்கு	=	$\frac{30}{54}-\frac{27}{54}$	$\frac{24}{54}-\frac{18}{54}$
	=	$\frac{3}{54}$	$\frac{6}{54}$

தியாக விகிதம் = **3 : 6 (அ) 1 : 2**

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பேப.எண்	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு பற்று		6,000	
	மாலதி முதல் க/கு (6,000 × 1/3)			2,000
	சோபனா முதல் க/கு (6,000 × 2 / 3)			4,000
	(நற்பெயருக்காக பெற்ற தொகை கூட்டாளிகளின் தியாக விகிதப்படி பகிரப்பட்டது)			

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

45. a

I. **முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது**

கூட்டாண்மை ஒப்பாவணத்தில் முதல் மீது வட்டி குறிப்பிடாத போது முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை.

II. **கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப் படும்போது**

அகமது தொடக்க முதல் (ஓராண்டு)	=	60,000 x 4 /100	= ₹ 2,400
பசீர் தொடக்க முதல் (ஓராண்டு)	=	40,000 x 4 /100	= ₹ 1,600
			₹ 4,000

போதிய இலாபம் இருப்பதால் முதல் மீது வட்டி வழங்கலாம்

(iii) **கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும்போது**

அகமது தொடக்க முதல் (ஓராண்டு)	=	60,000 x 6 /100	= ₹ 3,600
பசீர் தொடக்க முதல் (ஓராண்டு)	=	40,000 x 6 /100	= ₹ 2,400
			₹ 6,000

போதிய இலாபம் இல்லாததால் முதல் மீது வட்டி வழங்கப்படாது. இலாபம் ₹ 5,000 கூட்டாளிகளின் முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

45. b

தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின்
2019 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ப வருவாய் செலவினக் கணக்கு வ

செலவுகள்	தொகை ₹	தொகை ₹	வருமானம்	தொகை ₹	தொகை ₹
சம்பளம்		20,000	வட்டி பெற்றது		5,000
வாடகை		24,000	சந்தா		55,000
பயணச்செலவுகள்		2,000	நுழைவுக் கட்டணம்		7,000
அச்சு எழுதுபொருள்		6,000			
அறைகலன் விற்றதால் ஏற்பட்ட நட்டம்		1,000			
உபரி		14,000			
		67,000			67,000

குறிப்பு –

✓ **அறைகலன் விற்ற விலை – ஏட்டு மதிப்பு (ஏட்டு மதிப்பை விட விற்ற விலை அதிகம். எனவே இலாபம்) 17000 – 16000 = ₹ 1,000**

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

46. a

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு)	1,30,000	ரொக்கம் பெற்றது	4,20,000
கடன் விற்பனை க/கு (இருப்பு)	**5,40,000**	விற்பனைத் திருப்பம்	35,000
		வாராக்கடன்	15,000
		இருப்பு கீ/இ (இறுதி இருப்பு)	2,00,000
	6,70,000		**6,70,000**

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹ 4,60,000 + ₹ 5,40,000

∴ மொத்த விற்பனை = ₹ 10,00,000

46. b

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017 ஏப்ரல் 31	கட்டடம் க/கு ப		30,000	
	மறுமதிப்பீட்டுக் க/கு			30,000
	(கட்டடம் மதிப்பு உயர்த்தப்பட்டது)			
	மறுமதிப்பீட்டுக் க/கு ப		18,000	
	சரக்கிருப்பு க/கு			5,000
	அறைகலன் க/கு			12,000
	கொடுபடா பொறுப்பு க/கு			1,000
	(சரக்கிருப்பு, அறைகலன் மீது தேய்மானம் நீக்கியது மற்றும் கொடுபடா பொறுப்பு கணக்கு உருவாக்கியது)			
	மறுமதிப்பீட்டுக் க/கு ப		12,000	
	ரோஜா முதல் க/கு			4,800
	நீலா முதல் க/கு			3,600
	கனகா முதல் க/கு			3,600
	(மறுமதிப்பீட்டு இலாபம் பகிர்ந்தளிக்கப்பட்டது)			

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

மறுமதிப்பீட்டுக் கணக்கு

ப வ

விவரம்	`	`	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		5,000	கட்டடம் க/கு	30,000
அறைகலன்		12,000		
கொடுபடா பொறுப்பு க/கு		1,000		
மறுமதிப்பீட்டு இலாபம் :				
ரோஜா முதல் க/கு $\left(12{,}000 \ x \ \frac{4}{10}\right)$	4,800			
நீலா முதல் க/கு $\left(12{,}000 \ x \ \frac{3}{10}\right)$	3,600			
கனகா முதல் க/கு (12,000 x 3/10)	3,600	12,000		
		30,000		30,000

47. a

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல் நிதி	**1,15,000**	கட்டடம்	40,000
(இருப்புக் கட்டும் தொகை)		அறைகலன்	50,000
கடன் வாங்கியது	10,000	முதலீடுகள்	20,000
சந்தா முன்கூட்டிப் பெற்றது	5,000	சந்தா பெறவேண்டியது	10,000
		வங்கி ரொக்கம்	6,000
		கைரொக்கம்	4,000
	1,30,000		1,30,000

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

47. b

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

எடுப்புதொகை x 12 = மொத்த எடுப்பு தொகை x வட்டி வீதம் x 6.5/12

2,500 x 12 = 30,000 x 4/100 x 6.5/12

= ₹ 650

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

எடுப்புதொகை x 12 = மொத்த எடுப்பு தொகை x வட்டி வீதம் x 6/12

2,500 x 12 = 30,000 x 4/100 x 6/12

= ₹ 600

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

எடுப்புதொகை x 12 = மொத்த எடுப்பு தொகை x வட்டி வீதம் x 5.5/12

2,500 x 12 = 30,000 x 4/100 x 5.5/12

= ₹ 550

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

Tvl12Acc

காலாண்டுப் பொதுத் தேர்வுகள் - செப்டம்பர் 2022

வகுப்பு - 12

கால அளவு:3.00 மணி நேரம் **கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்:90

பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
3. உரிமையாளரின்சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில் அவருடைய முதல் தொகை.
   அ) ₹ 85,000 ஆ) ₹ 1,06,000 இ) ₹ 21,000 ஈ) ₹ 64,000
4. வருவாய்மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக்கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரிதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
5. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
6. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி
7. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
   அ) வழங்குப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்
8. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது
   ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்
9. சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
   அ) ₹ 25,000 ஆ) ₹ 5,000 இ) ₹ 10,000 ஈ) ₹ 15,000
10. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
    அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
    இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது
11. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
    அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாராக் க/கு
12. பொருத்துக.
    (i) தியாக விகிதம் — 1. முதலீட்டு மாறுபடும் நிதி
    (ii) பழைய இலாபப்பகிர்வு விகிதம் — 2. பகிர்ந்துதரா இலாபம்
    (iii) மறுமதிப்பீட்டு கணக்கு — 3. நற்பெயர்
    (iv) முதல் கணக்கு — 4. பதிவுறா பொறுப்பு

	(i)	(ii)	(iii)	(iv)
அ)	1	2	3	4
ஆ)	3	2	4	1
இ)	4	3	2	1
ஈ)	3	1	2	4

13. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது
    அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை
14. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
    அ) அனைத்துகூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள்
    இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்
15. கூட்டாளி ஒருவர் ஜீன் 30 அன்றுகூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
    அ) நடப்புகணக்காண்டின் இறுதி வரைக்கும்
    ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
    இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
    ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்
16. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
    அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
    இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

17. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
அ) சராசரிஇலாபம் ஆ) சாதாரண இலாப விகிதம்
இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் ஈ) இவைகளில் ஏதுமில்லை

18. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

19. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு

20. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாபநட்டங்களை 5:3 என்றவிகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தை கணக்கிடவும்.
அ) 1:3 ஆ) 3:1 இ) 5:3 ஈ) 3:5

பகுதி - II

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30க்கு கட்டாயம் விடையளி. **7×2=14**

21. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

22. பின்வரும் தகவல்களிலிருந்து இலாப அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	2,20,000
2018, டிசம்பர் 31 அன்று முதல்	1,80,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	40,000
அவ்வாண்டில் எடுப்புகள்	50,000

23. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?

24. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

25. மணி என்ற கூட்டாளி 2018 செப்டம்பர் 1 அன்று ரூ. 30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு மாறுபடும் முதல் முறையில் அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

26. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு.
2014 = ₹ 4,000 ; 2015 = ₹ 3,000 ; 2016 = ₹ 5,000 ; 2017 = ₹ 4,500 ; 2018 = ₹ 3,500
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

27. தியாக விகிதம் என்றால் என்ன?

28. மாலா மற்றும் அனிதா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். மெர்சி என்பவர் 1/5 இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் கூட்டாளியாக சேருகிறார். புதிய இலாபப்பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

29. கூட்டாளி விலகல் என்றால் என்ன?

30. கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளி தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2 ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

பகுதி - III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40க்கு கட்டாயம் விடையளி. **7×3=21**

31. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

32. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.

விவரம்	₹
தொடக்க கடனீந்தோர்	1,70,000
கொள்முதல் திருப்பம்	20,000
கடனீந்தோருக்குச் செலுத்தியது	4,50,000
இறுதிக் கடனீந்தோர்	1,90,000

33. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

விவரம்	1.1.2018 (₹)	31.12.2018 (₹)
பெறவேண்டிய சந்தா	10,000	7,000
முன்கூட்டிப்பெற்ற சந்தா	3,000	5,000

2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹ 1,50,000

34. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 ன் படிகடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும்.

35. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.
அ) சராசரி இலாபம் ₹ 20,000
ஆ) சாதாரண இலாப விகிதம் 10%
இ) பயன் படுத்தப்பட்ட முதல் ₹ 1,50,000

36. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

37. இராஜா மற்றும் இரவி என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இல்லாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இராம் என்பவரை 1/4 இலாபப்பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். இராம் 1/20 பங்கினை இராஜாவிடமும், 4/20 பங்கினை இரவியிடமும் பெறுகிறார். புதிய இலாபம் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

38. ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(i) வளாகத்தின் மதிப்பை ₹ 40,000 உயர்த்த வேண்டும்.
(ii) சரக்கிருப்பு ₹ 3000, இயன்கிரம் ₹ 6,500 மதிப்பு குறைக்க வேண்டும்.
(iii) கொடுபடாச் செலவுகள் ₹ 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
மறுமதிப்பீட்டுக்கணக்கு மட்டும் தயாரிக்கவும்.

39. ஆதாய விதைம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?

40. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.
2016 = ₹ 8,000 ; 2017 = ₹ 10,000 ; 2018 = ₹ 9,000

பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **7×5=35**

41. அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) சராசரி இலாபம் ₹ 14,000
(ii) சாதாரண இலாபம் ₹ 4,000
(iii) சாதாரண இலாப விகிதம் 15%
(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5
5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352. **(அல்லது)**
ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?

42. அ) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் யாவை? **(அல்லது)**
ஆ) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலை குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்			கட்டடம்	80,000
மணி	50,000		சரக்கிருப்பு	20,000
ரமா	50,000		அறைகலன்	20,000
தேவன்	50,000	1,50,000	கடனாளிகள்	20,000
பற்பல கடனீந்தோர்		20,000	கைரொக்கம்	10,000
இலாபநட்டக் க/கு		30,000		
		2,00,000		2,00,000

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.
(i) சரக்கிருப்பில் ₹ 5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்.
(ii) வாரா ஐயக்கடனுக்கு ₹ 1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
(iii) கட்டடத்தின் மதிப்பு ₹ 16,000 அதிகரிக்கப்பட வேண்டும்.
(iv) மணிக்குச் சேர வேண்டிய பணம் உடனடியாகச் செலுத்த வில்லை.
மறுதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் க/கு தயாரிக்கவும்.

43. அ) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

விவரம்	₹
மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு	3,000
அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள்	17,000
பழையமட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை	2,000
மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு	4,000

(அல்லது)

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து ரூபன் மற்றும் டெரி அவர்களின் முதல், நிலைமுதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	ரூபன் (₹)	டெரி (₹)
2018, ஏப்ரல் 1 அன்று முதல்	70,000	50,000
2018, ஏப்ரல் 1 அன்று நடப்புக்கணக்கு (வ)	25,000	15,000
கூடுதல் முதல் கொண்டுவந்தது	18,000	16,000
2018-2019 ல் எடுப்புகள்	10,000	6,000
எடுப்புகள் மீது வட்டி	500	300
இலாபப்பங்கு (2018-2019)	35,000	25,800
முதல் மீது வட்டி	3,500	2,500
சம்பளம்	-	18,000
கழிவு	12,000	-

44. அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு.
(i) ஈட்டிய இலாபங்கள் 2016 = ₹ 25,000 ; 2017 = ₹ 23,000 ; 2018 = ₹ 26,000.
(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யபடவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டதால் அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். **(அல்லது)**

ஆ) மாலதி மற்றும் ஷோபனா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 5:4 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் ஜெய ஸ்ரீ என்பவரை 1/3 இலாபப்பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். ஜெய ஸ்ரீ தன்னுடைய பங்காக ₹ 6,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2:1 நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக் கொண்டு, நற்பெயர் சரிக்கட்டுதலுக்கான தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

45. அ) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல்முறையே ₹ 60,000 மற்றும் ₹ 40,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 2:1, அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ₹ 5,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

(i) முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது.

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி, முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப்படும் போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும் போது **(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்ற பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டு வருவாய் மற்றும் செலவினக் கணக்குத் தயார் செய்யவும்.

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்கஇருப்பு			
கைரொக்கம்	14,000	சம்பளம்	20,000
வட்டி பெற்றது	5,000	வாடகை	24,000
சந்தா	55,000	பயணச் செலவுகள்	2,000
உயில் கொடை	48,000	அச்சு மற்றும் எழுதுபொருள்	6,000
நுழைவுக்கட்டணம்	7,000	முதலீடுகள் செய்தது	50,000
அறைகலன் விற்றது	16,000	விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது	33,000
(ஏட்டுமதிப்பு ₹17,000)		இருப்பு கீ/இ	
		கைரொக்கம்	10,000
	1,45,000		1,45,000

46. அ) பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள்	1,30,000
அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது	4,20,000
விற்பனை திருப்பம்	35,000
வாராக்கடன்	15,000
2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள்	2,00,000
ரொக்க விற்பனை	4,60,000

(அல்லது)

ஆ) ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

(i) கட்டடத்தின் மதிப்பில் ₹ 30,000 அதிகரிக்க வேண்டும்.

(ii) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iii) கொடுபடா பொறுப்புகளுக்கு ₹ 1000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்போட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

47. அ) கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

விவரம்	₹
அறைகலன்	50,000
கட்டடம்	40,000
2017-2018 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	10,000
2018-2019 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது	5,000
கடன் வாங்கியது	10,000
முதலீடுகள்	20,000
கைரொக்கம்	4,000
வங்கிரொக்கம்	6,000

(அல்லது)

ஆ) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593